பட்ட ஒரு கடிதம் 22–1–82 காலை 10.00 மணி முதல் 1.30 மணி வரை வாரிய அலுவலகத்தில் ஆஜராக வேண்டுமென்றுபோடப் பட்டிருக்கிறது. 22-ந் தேதி வர வேண்டுமென்று சொல்லி எழுதப்பட்ட கடிதம் 29-ந்தேதி தபாலில் வருகிறது. இந்த இலட்சணத்தில்தான் இந்த குடிசைமாற்று வாரியம் செயல் பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெளிவாகச் சொல்லி, எத்தனையோ குறைகள் இருந்தும் கூட இந்த அளவுக்கு ஆட்சி செய்கிற உங்களைப் பாராட்டி, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 6–2–1982-ம் தேதி காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

*97. இந்திய தணிக்கைத் துறை தலைவரின் 1979–80ஆம் ஆண்டிற்கான அறிக்கை (கமர்சியல்) (ஆங்கிலம்) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின் கீழ்பேரவைமுன் வைக்கப்பெற்றது)

98. பூம்புகார் கப்பற் போக்குவரத்துக் கழகத்தின் 1980–81-ஆம் ஆண்டிற்கான 7-ஆம் ஆண்டு அறிக்கை (ஆங்கிலம்) (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாங்கள். எதுவுமில்லை.

20 SEP 1982